RAJAH (Jaffna)
Daily at 10-30, 2-30
6-30 & 10-00
Sasi kapoor Asha Parekh
in
PYAR KA MAUSAM
பியார் கா மோசம்
(ஹிந்தி-கலர்)

## நாகராஸ் சினிமா

காலை
தினசரி 4-30
சனி ஞாயிறு 10-30
TOPKAPI

தினசரி 6-30, 9-45
சனி ஞாயிறு 2-30
கந்தன் கருணை

## மகாத்மா

(நெல்லியடி)
தினசரி 3 காட்சிகள்
V. S. T. பிலிம்ஸ்
# குத்து விளக்கு

## மனோகரா

[யாழ்ப்பாணம்]
ஜெமினி — பானுமதி
கல்யாண் பாலாஜி
நடித்த
தினசரி மாலை 6-30, 9-30
# பட்டத்து ராணி

Daily 10-30 a. m 4-45 p.m. Guiliano Gemma in
FORT YUMA GOLD

## வெலிங்டன்

(யாழ்ப்பாணம்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு காலை 10-30

எம். ஜி. ஆர். ★ மஞ்சுளா
பத்மினி - அசோகன் - மனோகர்
சுந்தரராஜன் - தேங்காய் சினிவாசன் - சோ
நடித்த
சத்யா மூவிஸாரின் ஈஸ்ட்மென் வர்ணச்சித்திரம்
# ரிக்ஷாக்காரன்

## நியூ கலிங்கன்

இணுவில்
தினசரி 6-30, 10-00
சனி, ஞாயிறு 2-30
சிவாஜி-ஜெயலலிதா
நடித்த
தெய்வ மகன்

## பவானி

மூளாய்
தினசரி 6-30
ரங்காராவ்- அஞ்சலிதேவி
பக்த பிரகலாதா

தினசரி இரவு 9-30
சனி ஞாயிறு 2-30
ஆனந்தன்
நடித்த
விஜயபுரி வீரன்

## சாந்தி

(சுன்னாகம்)
சனி 4-15 மட்டும்
James Garner
in
MARLOW
(adults only)

தினசரி 6-15, 9-30
சனி 10-00
ஞாயிறு 10-00 2-30
சிவாஜி-ஜெயலலிதா
நடித்த
சுமதி என் சுந்தரி

REGAL (Jaffna)
Daily 5-15, 7-15p.m.
Sat. Sundays 10-30a. m.
BECAUSE OF EVE
(Adults only)

தினசரி 2-00 இரவு 9-45
தேவ் ஆனந்த்-
வைஜந்திமாலா
நடித்த
JEWEL THIEF
நகைத் திருடன்
(ஹிந்தி- கலர்)

## வரி விளம்பரம்

இயந்திரங்கள், இயந்திர உதிரிப்பாகங்கள், உபகரணங்கள் ஒட்டுவேலைகள் பல்லுச் சக்கரம் வெட்டுதல் (Gear wheel cutting) என்ஜினியரிங் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெஷின் கொம்பனி, 95. ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 4162

### தேவை

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற எல்லைக்குள் மின்சார வசதியுடன் கூடிய தனிப்பட்ட வீடு, பின்னளவு வசதியுடன் வாடகைக்கு தேவை. தொடர்புகொள்ளவும். ஓ. அண்ணாமலை, கே/யா, எஸ். சண்முகராசா 75, மானிப்பாய் வீதி. யாழ்ப்பாணம். 4119

### சோதிடம்

நட்சத்திரம், வயது, பூமியின் சுவர். 60க்குள் ஒரு இலக்கம் குறித்து, முத்திரையுடன் கடிதமூலமும், நேரிலும் பதில் பெறலாம். இலவச ஆருடம். டாக்டர் ந. சண்முகராஜா ஜே. பி., கொக்குவில். 4175

### விற்பனைக்கு

CL 2329 A 40 கார் விற்பனைக்குண்டு. சந்திரா பெனியன் கம்பெனி, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம். 4212

## வெஸ்லி சினிமா

(மானிப்பாய்)
தினசரி 6-00, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி - சாவித்திரி
நடித்த
கடன் வாங்கி
கல்யாணம்

### தேவை

பணியில் கூடிய காய் உள்ளதாயும் இளம்பிள்ளையாயும் 50 ஏக்கருக்கு உட்பட தென்னந்தோட்டம் ஒன்று விலைக்குத் தேவை. காணி விலையையும் மற்றும் முழு விபரங்களுக்கும் மனு செய்க. சோ. பொ. சோமசுந்தரம், வல்வெட்டித்துறை. 4191

### நன்றி நவிலல்

மீசாலை விக்னேஸ்வர வித்தியாலயத்தில் இளைப்பாறிய தலைமையாசிரியரான காலஞ்சென்ற பண்டிதர் சி. கா. தம்பையா அவர்களின் ஈமச்சடங்கில் பங்குபற்றியோர், அனுதாபச் செய்தி தெரிவித்தோர், குறிப்பாக விக்னேஸ்வர வித்தியாலய மாணவர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கிறோம். அன்னாரின் ஈமச்சடங்கில் நண்பர்களுக்கு அறிவித்தல் தராமைக்கு மன்னிப்புக் கோருகிறோம். 4195

### மக்கள் கமிட்டி கமிஷனர்

யாழ்ப்பாணம், சனி மக்கள் கமிட்டி கமிஷனர் திரு. மைகல் பெர்னாண்டோ நேற்று முன் தினம் யாழ்ப்பாணம் வந்திருந்தார். யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜோசப்புடன் அவர் கலந்துரையாடினார்.

## யாழ். தியேட்டர்

(காங்கேசன்துறை)
தினசரி 6-30, இரவு 10-0[illegible]
சனி, ஞாயிறு 2-3[illegible]
ஜெய்சங்கர்-வாணி[illegible]
நடித்த
மனச்சாட்[illegible]

## லிடோ

(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
★ எம். ஜி. ஆர்.
★ ஜெயலலிதா
★ சோ
★ அசோகன்
மற்றும் பலர் நடித்த
# கணவன்

## யாழ். வின்ஸர் வெண்திரையில்

1-4-72 சனிக்கிழமை குதூகல ஆரம்பம்
தினசரி 10-15, 2-15, 6-15, 9-45
ஜெய்சங்கர், நாகேஷ், எம் ஆர் ஆர் வாசு, தேவர்,
கருணாநிதி ராஜன், நாகையா, விஜயகுமாரி, விஜயலலிதா
நடித்த
# காலம் வெல்லும்

## இன்று மகத்தான ஆரம்பம்

ஒருவாரம் மட்டும் தினசரி 5 காட்சிகள்
சரித்திர நாயகன் சிவாஜி கணேசன்
கலைச்செல்வி ஜெயலலிதா
மேஜர் சுந்தரராஜன் — ரங்கராவ்
சந்திரபாபு — பாலாஜி — மனோகர்
பயில்வான் நந்தாவா — ஆடும் அழகி பத்மா கன்னா
நடித்த
சுஜாதாவின்
# ராஜா

(வண்ணச் சித்திரம்)

## ராணி சினிமா

(யாழ்ப்பாணம்)



# பாகிஸ்தானுக்கு சீனவின் ஏவுகணைகள்; டாங்கிகள்; படகுகள்!

## இரு படைப்பிரிவுகளும் அமைக்கப்படுமாம்

கராச்சி, மார்ச் 31

சீனவின் உயர்தர டாங்கிகள் ஏவுகணைகள், ஏவுகணைகளைத் தாங்கிச் செல்லும் காவல்படகுகள் பாகிஸ்தானுக்குப் பெருமளவில் கிடைக்கவிருக்கின்றன.

பாகிஸ்தானுக்கு அமெரிக்காவும் சண்டை விமானங்களைக் கொடுக்க விரும்புவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தான் படைப் பிரிவில் மேலும் இரு பிரிவுகளை ஏற்படுத்தக்கூடிய அளவுக்கு சீன ரி 69 ரக டாங்கிகளையும் ஏவாயுதங்களையும் ஏவுகணைகளை ஏவக்கூடிய காவற்படகுகளையும் பாகிஸ்தானுக்குக் கொடுக்க முன்வந்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சீன இவ்விதம் பெரிய அளவில் ஆயுதங்களைப் பாகிஸ்தானுக்குக் கொடுப்பது இதுவே முதற்தடவை.

இதேவேளையும் அமெரிக்காவும் சப்பர் ஜெட் விமானங்களை பாகிஸ்தானுக்குக் கொடுக்கவிருப்பதாகத் தெரியவருகிறது.

1966-ம் ஆண்டு பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே நடந்த போரின் பின் அமெரிக்கப் போர் விமானங்கள் வேறுவழிகளில் பாகிஸ்தானுக்குக் கிடைத்துவருகின்றதாம். கடந்த மார்கழி மாதத்தில் நடந்தபோரின் பொழுதும் லிபியா, ஜோர்டான் ஆகிய நாடுகளிலிருந்து அமெரிக்க ஜெட் போர் விமானங்கள் பாகிஸ்தானுக்குக் கிடைத்து வந்தன என்று நியூயோர்க் டைம்ஸ் பத்திரிகை எழுதியுள்ளது. ஜோர்டான் டிசம்பரில் நடந்த போரின் பொழுது பாகிஸ்தானுக்கு ஆதரவு தெரிவித்திருந்ததை குறிப்பிடத்தக்கது.

உகண்டாவிலிருந்து

### இஸ்ரேல் ராஜதந்திரிகளை வெளியேறுமாறு உத்தரவு

கம்பாலா, மார்ச் 31

உகண்டாவிலிருந்து இஸ்ரேலிய ராஜதந்திரிகளை வெளியேறுமாறு உகண்டா அரசு உத்தரவிட்டுள்ளது.

இவர்கள் உகண்டாவை விட்டு 10 நாட்களுக்குள் வெளியேறிவிட வேண்டுமென அரசு உத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சென்ற திங்கட்கிழமை சில இஸ்ரேலியர் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டார்களென்று வெளியேற்றப்பட்டனர். அதன் பின் உகண்டாவில் இராணுவ தொழில் நுட்பப் பயிற்சி அளித்துவந்த இஸ்ரேலிய நிபுணர்களையும் வெளியேறுமாறு உகண்டாவின் அதிபர் திரு அமீன் உத்தரவிட்டிருந்தார்.

இஸ்ரேலியர் உகண்டாவின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடவில்லையென்றும் ராஜதந்திரிகளை வெளியேறுமாறு இடப்பட்ட உத்தரவு தங்களுக்கு ஆச்சரியமாக இருப்பதாக இஸ்ரேல் வெளிநாட்டமைச்சு தெரிவித்துள்ளது.

### இந்தியாவுடன் ராஜதந்திர தொடர்பை ஏற்படுத்த பாக். விருப்பம்

கராச்சி, மார்ச் 31

இந்தியாவுடன் ராஜதந்திர தொடர்புகளைச் சில நிபந்தனையின்பேரில் ஆரம்பிப்பதற்கு பாகிஸ்தானுக்கு ஆட்சேபனையில்லையென்று பாகிஸ்தான் ஜனாதிபதி பூட்டோ தெரிவித்துள்ளார்.

நிருபர் மகாநாட்டில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையில் ஜனாதிபதி பூட்டோ இத்தகவலைத் தெரிவித்தார்.

மேலும் அவர், இருநாடுகளுக்குமிடையே பேச்சுவார்த்தை மூலம் தீர்க்கப்பட வேண்டிய விஷயங்கள் பல இருக்கின்றன. இவற்றைப் பேசித் தீர்ப்பதற்கு இரு நாடுகளுக்குமிடையே ராஜதந்திரத்தொடர்பு மிகவும் அவசியம். இதனைச் செய்வதற்கு நான் பாடுபட்டு வருகிறேன் என்று தெரிவித்தார்.

துருக்கியில்

### கடத்தப்பட்ட நிபுணர்கள் சுட்டுக்கொலை

அங்காரா, மார்ச். 31

துருக்கியில் இடதுசாரி கொரிலாக்களினால் கடத்தப்பட்ட மூன்று தொழில் நுட்ப நிபுணர்களும் வீடொன்றில் சுட்டுக் கொலை செய்யப்பட்டுக் கிடக்கக் காணப்பட்டனர்.

இந்த தொழில் நுட்ப நிபுணர்களில் இருவர் பிரிட்டனைச் சேர்ந்தவர்கள். ஒருவர் கனடாவைச் சேர்ந்தவர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை கடத்தப்பட்ட இவர்களின் தலைகளில் துப்பாக்கிக்காயங்கள் காணப்பட்டனவாம்.

கடத்தப்பட்டவர்களைக் கண்டுபிடிப்பதில் பொலிசார் ஈடுபட்ட பொழுது வீட்டுக்கு வீடு துப்பாக்கிச் சண்டை நடைபெற்றதில் 8 கொரிலாக்களும் கொல்லப்பட்டனர் என்றும் வேறு அடையாளந் தெரியாத நபர்கள் சிலரும் கொல்லப்பட்டனர் என்றும் அரசு வட்டாரங்களில் அறிவிக்கப்பட்டது.

இவர்களின் மரணத்தையொட்டி துருக்கிப் பிரதமர் டாக்டர் ஆரிம் தனது வருத்தத்தை பிரிட்டிஷ் பிரதமருக்கும் கனேடியப் பிரதமருக்கும் தெரிவித்துள்ளார். இச்செய்தி தனக்குப் பெரும் அதிர்ச்சியைக் கொடுத்திருப்பதாக பிரிட்டிஷ் பிரதமர் ஹீத் தெரிவித்தார்.

பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் சேர் அலக்டக்ளஸ் ஹியூம் தமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்திருப்பதோடு, இவ்விதச் செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்படவேண்டுமெனத் தெரிவித்தார்.

இருமாநிலங்களில்

### கவர்னர்கள் நியமனம் இல்லை

கராச்சி, மார்ச் 31

பாகிஸ்தானிலுள்ள இரு மாகாணங்களுக்கு தேசிய அவாமிக்கட்சியின் தலைவர் வலிகானின் முடிவு தெரியும்வரை கவர்னர்களை நியமிப்பதில்லை என பாகிஸ்தான் ஜனாதிபதி பூட்டோ முடிவுசெய்துள்ளார்.

### கலாச்சார சபை

வல்வெட்டித்துறை, வெள்ளி

வடமராட்சி தென்மேற்கு காரியாதிகாரி அலுவலகத்தில் பிரதேச கலாச்சாரசபை உருவாகியுள்ளது.

பின்வருவோர் உத்தியோகத்தர்களாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்: தலைவர் திரு. கே. நடராசா. உபதலைவர் திரு க சிவப்பிரகாசம். செயலாளர் திரு பி சிவப்பிரகாசம், உபசெயலாளர் திரு மு இரத்தினம், பொருளாளர் திரு என் மாசிலாமணி, உபபொருளாளர் திரு க செல்லையா. மற்றும் பதினொரு பேர்கொண்ட நிர்வாகசபைக் குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

### புதிய வரி மதிப்பீடு

வல்வெட்டித்துறை, வெள்ளி

வல்வெட்டித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட வீடுகள் காணிகள் புதியவரி மதிப்பீடு செய்யப்பட்டுவருகின்றது.

இருவட்டாரங்களில் குடியிருப்புவரி மதிப்பீடு செய்யப்பட்டுவிட்டது. தொடர்ந்து மற்றைய வட்டாரங்களும் மதிப்பீடு செய்யப்படுகின்றன.

### புதிய ஜே. பி.

வல்வெட்டித்துறை, வெள்ளி

தெல்லிப்பழை பட்டினசபை எல்லைக்குட்பட்ட கனுவில் பகுதி (6-ம் வட்டாரத்திற்கு) சமாதான நீதவானாக திரு க கிருஷ்ணபிள்ளை பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு வீ ஜே இராஜரத்தினம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

அடுத்தவாரம் சுவரண்சிங்

### மாஸ்கோ செல்கிறார் ரஷ்ய தலைவர்களுடன் பேச!

புதுடில்லி, மார்ச் 31

இந்திய வெளியுறவு அமைச்சர் திரு. சுவரண்சிங் சோவியத் தலைவர்களுடன் பேச்சுவார்த்தை நடாத்துவதற்காக அடுத்தவாரம் மாஸ்கோ செல்கிறார்.

ஏப்பிரல் 3-ம் திகதியிலிருந்து 5-ம் திகதிவரை மாஸ்கோவில் தங்கும் திரு சுவரண்சிங் சோவியத் தலைவர்களுடன் சர்வதேசப்பிரச்சினைகள் பற்றியும் குறிப்பாக தென் கிழக்காசியப் பிரச்சினைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவார் என நம்பப்படுகிறது.

திரு சுவரண்சிங்கின் இவ்விஜயம் கடந்த 6 வாரங்களுக்கு முன்பே தீர்மானிக்கப்பட்டதாகவும், இவர் மாஸ்கோவில் தங்கியிருக்கும் பொழுது பாகிஸ்தான் பிரதிநிதிகளுடன் பேசும் வாய்ப்பில்லை என்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

### ரஷ்யாவுக்கு தெரிவிக்கவில்லை

கடந்த டிசம்பர் மாதம் பாகிஸ்தானுக்கும் இந்தியாவுக்குமிடையே நடைபெற்ற போரின்பொழுது, மேற்குரங்கில் போர் நிறுத்தம் செய்யும் இந்தியாவின் முடிவை போர்நிறுத்தம் செய்வதற்குமுன்பே சோவியத் யூனியனுக்கு இந்தியா தெரிவித்ததென்பதில் எவ்வித உண்மையுமில்லை என்று இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. சுவரண்சிங் ஆகிய மன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியினர் கேட்ட கேள்விக்கு அவர் பதிலளிக்கையில் போர்நிறுத்தம் செய்வதற்கு எந்தவொரு நாட்டின் நிர்ப்பந்தமும் இருக்கவில்லை. ஐ. நா. வில் வங்காளதேசத்தை உறுப்பு நாடாகச் சேர்த்துக்கொள்ள இந்தியா முயற்சி செய்யும் என்ற உறுதிப்பாட்டிலிருந்து விலகாது. வங்காளதேசத்தின் உண்மைநிலையை சர்வதேச சமூகம் இப்பொழுது அதிகமாக உணர்ந்து வருகிறது. இதுவரை 55 நாடுகள் அதனை அங்கீகரித்துள்ளன. ஐ. நா. வின் அடுத்த கூட்டம் ஆரம்பமாவதற்குமுன் இன்னும் பல நாடுகள் அதனை அங்கீகரித்து விடுமென நான் நம்புகிறேன் இதனால் வங்காளதேசத்தை ஐ. நா. வில் உறுப்புநாடாகச் சேர்ப்பது சுலபமாகிவிடும் என்றார்.

### இளம் பெண் தற்கொலை

வல்வெட்டித்துறை வெள்ளி

சாரையடி என்னும் இடத்தைச் சேர்ந்த தாமு பொன்னையா என்பவரின் 26 வயது மகளான திலகவதி என்னும் பெண் தற்கொலை செய்து கொண்டார்.

மரணவிசாரணை அதிகாரியின் விசாரணையில் பிரேத பரிசோதனை செய்த வைத்தியசாலை அதிகாரி டாக்டர் கே பத்மநாதன் நரம்பு, சுவாசப்பை முதலிய உறுப்புகள் நஞ்சு குடித்ததால் பழுதடைந்ததன் காரணமாக மரணம் சம்பவித்தது எனச் சாட்சியமளித்தார்.

பருத்தித்துறைப் பகுதி மரணவிசாரணையதிகாரி திரு ஆர் எஸ் இராமநாதன் தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

### மறைவுக்கு அஞ்சலி

உரும்பிராய், வெள்ளி

"நண்பர்களுக் கெல்லாம் நல்லநண்பராயும் ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியராயும் மாணவர்களுக் கெல்லாம் நல்லாசிரியராயும், உலகத்துக்கு நல்லவழிகாட்டியாயும் வாழ்ந்தார் பண்டிதர் சி. கா. தம்பையா"

மீசாலை விக்கினேஸ்வர வித்தியாலயத்தின் முன்னாள் அதிபரும், ஆசிரியர் சங்கப் பிரமுகருமான பண்டிதர் சி. கா. தம்பையா மறைவையொட்டி சிறுப்பிட்டியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்ற அஞ்சலி நிகழ்ச்சியில் உரையாற்றிய பண்டிதர் செ துரைசிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. ஏ. பி. செல்லையா உடுப்பிட்டி அஞ்சலியுரை நிகழ்த்தினார்.

### கைப்பணிப் பொருட்காட்சி

சங்கானை, வெள்ளி

தங்கைமார் பணிக்குழு இலங்கையின் பிரசித்தி பெற்ற கைப்பணிப் பொருட்கள் விற்பனை ஒன்றை நாளை மாலை 4 மணிக்கு லோறன்ஸ் வீதியில் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நடாத்தவுள்ளது.

நீர்ப்பாசனம், மின்சாரம், நெடுஞ்சாலைகள் அமைப்பு அமைச்சரின் பாரியார் திருமதி இரஞ்சி சேனநாயக பிரதம அதிதியாகக் கலந்து விற்பனையைத் திறந்துவைப்பார்.


நாடு செழிக்க! நாட்டவர் உய்ய!!

பொன்னாலயம்பதி

மகாலக்ஷ்மிக்கு கோடி அர்ச்சனை



திங்கட்கிழமை 3-4-72 அனுஷ நட்சத்திர அபிஷேகம், பூஜை விசேஷ ஹோமம் தொடர்ந்து அர்ச்சனை

அர்ச்சனையில் பங்குபற்றி அருள் பெறுக!

(சகஸ்ரநாம அர்ச்சனைக்கு ரூபா 5/-)

ச. வைத்தீஸ்வர சர்மா

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் தேவஸ்தானம்

பொன்னாலை: சுழிபுரம்.

வில்லூன்றி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேக சிறப்பிதழ்


# பூர்வ தனுஷ்கோடியெனும் வில்லூன்றி விநாயகராலய வரலாறு

ஆன்மாக்களை இறைவனிடத்திலே உய்விக்கும் இடங்களே ஆலயங்கள். அத்தகைய ஆலயங்களைச் செம்மையாகப் போற்றிப் பாதுகாத்தல் நமது முதற் கடமையாகும். அப்பணி ஆன்மாக்களின் உய்வு கருதிச் செய்யும் நற்பணியாதலால் அதுவே திருப்பணியுமாகும்.

இந்நிலையிலே முன்னேற்றப் பாதையில் சென்று கொண்டிருக்கும் ஆலயங்களுள் வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயமும் ஒன்றாகும் என்பது சைவ உலகறிந்த உண்மை. மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்றும் ஒருங்கே அமையப்பெற்ற புண்ணிய தலம்.

ஆங்கிலேயர் நம் நாட்டில் ஆட்சி புரிந்த காலத்தில், இந்தப்புனித தீர்த்தத்துக்கு அண்மையில் அரசர் என்ற பெயர் தாங்கிய தருமவான் முயன்று வீரகத்தி விநாயகர் ஆலயம் ஒன்றினை நிறுவினர். 892 ம் ஆண்டு திரு. நி. மாரிமுத்து என்பவரும், வைரமுத்து கிருஷ்ணர் என்பவரும் இந்த ஆலயத்திற் சில திருத்தங்களைச் செய்தனர். 1893-ல் புனிதநன்னாளில் கும்பாபிஷேகம் நிறைவெய்தியது. 1913-ம் ஆண்டு இரண்டு காலப்பூசைகள் நடைபெற திரு. மாரிமுத்து வெற்றிவேலு ஒழுங்கு செய்தார். 1916-ம் ஆண்டு முதல் கிருஷ்ணர் வைரமுத்து என்பவர் கோயிலின் நிர்வாகப் பொறுப்பினை ஏற்று மூன்று காலப்பூசை நடைபெறுவதற்கு ஏற்ற ஒழுங்குகளைச் செய்தார்.

இவ்வாறு இருக்கையில் வில்லூன்றித் தொண்டருள் இத்தாத்த வித்தகருமாகிய அண்மையில் சிவபதம் அடைந்த உயர் திரு. சே. இராசரத்தினம் அவர்கள் 1942-ம் ஆண்டுமுதல் இவ்வாலயத்தின் பொறுப்பினை ஏற்றுத் தர்மகர்த்தாவாகப் பணியாற்றினார். அவர்தம் பணி செவ்வனே நிற்க விக்கு செவ்வனே நடைபெற்றது. அதற்குச் சான்று இன்று வானளாவி நிற்கும் ஸ்தூலலிங்கம் என்றும் போற்றப்படும் ராஜகோபுரமும், மற்றைய ஆலய மண்டபங்களும், மூர்த்திகளுமாகும். பஞ்சமுக விநாயகரை ஸ்தாபித்து ஆண்டுதோறும் இலட்சார்ச்சனை செய்வித்த மகிழ்ச்சி கண்ட தர்மகர்த்தா. தனது இறுதி மூச்சுவரையிலும் திருப்பணியிலே பணிபுரிந்தார்.



சைவப்புலவர் வ. கந்தசாமி

முக விநாயகருக்கு ஆலயமும், தீர்த்தக் கேணியும் அவசியம் தேவையெனக் கண்டு ஆரம்பித்து வைத்தார். தேர்கட்டுவித்த தேசிகராவார். மேலும் ஆலயத்தில் புராணபடனம், சமய உபந்நியாசம், சமய தீட்சை என்பவற்றை முறையாக நடத்தினவர். யாழ் நகரில் பெரியபுராண விழாவை நடத்திய பெருமை இவரையே சாரும். இப்பணிகளோடு மற்றைய ஆலயங்கள், சமயஸ்தாபனங்கள் பொதுப் பணிகள் பல ஆற்றியுள்ளார்.

இவ்வாறு பணிகள் பல புரிந்து வருகையில் 10-11-71-ல் திரு. சா. இராசரத்தினம் அவர்கள் சிவபதம் அடைந்தார். எல்லோருக்கும் பெரும் அதிர்ச்சி. ஆலய நிர்வாகம், அவர் ஆரம்பித்த திருப்பணி வேலைகள் என்னவாகுமோ என்பது அன்னாரின் கேள்வியாயிற்று. இந்நிலையில் மேலும் அவரின் பணிகள் தொடர விநாயகப் பெருமான் திருவருள் பாலித்துள்ளார். அவருக்குப்பின் புத்திரன் திரு. இ. குமர வடிவேல் தர்மகர்த்தாவாகவும், நிர்வாகியாகவும் பொறுப்பினை ஏற்றுக் கொண்டார். வயதில் இளைஞர் ஆனால் அறிவு, அநுபவம், நிர்வாகம் என்பவற்றின் திறன் உண்டு தந்தையாருடன் இருந்த அநுபவம் பெற்றவர். தன் வாழ்நாளில் சிவபதம் அடைந்த தந்தையாருக்கு என்ன செய்யலாம் என்று எண்ணினார். அவரின் ஆத்ம சாந்தியடைய என்ன வழி என்று கண்டார். அதன் முதற்படியே இவ்வாலயத்தில் 4-3-72-ல் நடைபெற்ற பாலஸ்தாபனமாகும். இன்று விண்ணுழி விமானம் புதுப் பொலிவுடன் திகழ்கின்றது. ஆலயமண்டபங்கள், மடைப்பள்ளி, வாகனசாலை, சுற்று மதில்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளன. இராஜ கோபுரத்தின் அண்மையிலுள்ள மணிக்கோபுரத்தில் இரண்டாவது மணியும் ஏற்றப்பட்டது. மக்களின் சமய அறிவை வளர்ப்பதற்காக இராசரத்தினச் சிவதர்ம காவலன் அவர்கள் சேகரித்து வைத்த சமய நூல்கள், ஏடுகள் என்பன ஒன்று சேர்க்க பட்டு அவரின் ஞாபகச்சின்னமாகச் சைவ சமய நூல் நிலையம் ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது.

அடுத்தபடியாகத் திருப்பணி வேலைகளின் காரணமாக சமீபகாலமாக மூடப்பட்டிருந்த வில்லூன்றித் தீர்த்தக்கேணியும் மிகவிரைவில் சைவமக்களின் உபயோகத்திற்குத் திறந்துவிடப்படவுள்ளது. அக்கேணியைச் சுற்றியுள்ள பகுதியில் சைவமக்களுக்கு ஒரு குடியேற்றத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு தனது தந்தையாரின் எண்ணங்களுக்கு ஏற்ற வகையில் மைந்தன் பணிபுரிந்துவருவது பாராட்டத்தக்க தொன்றாகும்.

எனவே இந்நிலையில் பொதுமக்களாகிய எங்கள் ஆதரவை நம்பி சமயப்பணிகள் பல புரிவோமாக.

# இராஜரத்னசிவதர்மகாவலர்

— பாஸ்கரன் —

மூப்பது வருடங்களுக்கு முன்பு ஒருகாலத்தில் பலவகைச் சிறப்போடும் பூர்வ தனுஷ்கோடி எனவழைக்கப்பட்ட வில்லூன்றி க்ஷேத்திரமானது தன் பண்டைச் சிறப்புகளையெல்லாமிழந்து சைவர்களின் கைவிடப்பட்டு நலிவடைந்து கூடியதொரு சூழ்நிலையில் வில்லூன்றியின் பரிபாலனத்தைப் பொறுப்பேற்றார் ஓர் உத்தம சைவநற்றொண்டன். இவர் வில்லூன்றியைச் சைவர்களின் புனித க்ஷேத்திரமாகக் காப்பாற்றுவதற்காகத் தமது உடல், பொருள், ஆவி அத்தனையையும் அர்ப்பணித்து செயல்பட்டார். இப்பெரியார் தான் இராசரத்தினச் சிவதர்மகாவலர்.

வில்லூன்றியைப் புனருத்தாரணம் செய்யும் அதே வேளையில் சைவப்பயிர் நன்கு வேரூன்றவும் வேண்டும் என்ற பேரவாவால் தமிழ்நாட்டிலிருந்து திருமுருக கிருபானந்தவாரியார் போன்ற அறிஞர் பெருமக்களை அழைத்து வில்லூன்றியில் சொற்பொழிவாற்றுவித்தார். விநாயகப்பெருமானை 1957-ம் ஆண்டு பாலஸ்தாபனஞ்செய்து ஆலயத்தைப் புனருத்தாரணஞ்செய்து 1959-ம் ஆண்டு தைத்திங்கள் மகா கும்பாபிஷேகம்செய்வித்தனர். 1959-ம் ஆண்டிலேயே புதிதாகக் கொடிமரம் நாட்டி, தேர், சப்ரம் செய்வித்து முதன்முதலாகக் கொடியேற்றி மகோற்சவம் நடைபெறச் செய்த பெருமையும் இவரையே சாரும். 1959-ம் ஆண்டுமுதல் ஆறுகாலப் பூசைகள் நடைபெறவர வழிசமைத்த இவர் 1964-ம் ஆண்டு தைத் திங்கள் பஞ்சமுகவிநாயகப் பெருமானைப் பிரதிஷ்டை செய்வித்து வழிபட்டுவந்தார். அதேயாண்டு 101 தினங்கள் பெரிய புராணபடனத்தைச் செய்து யாழ் நகரெங்கும் விழா வெடுத்தார்.

1965-ம் ஆண்டு இராஜ கோபுரப் பெரும் பணியை தன் சொந்தச்செலவிலே ஆரம்பித்து 1968-ம் ஆண்டு நிறைவேற்றி மிக விமரிசையாக கும்பாபிஷேகஞ் செய்வித்தார். அவர் நோயுற்ற பொழுதும் தமது பணியிற் சிறிதும் பின்வாங்காது ஆலயத்திற்கென இரண்டாவது மணிக்கோபுரத்தையும் பஞ்சமுகவிநாயகராலய முன்றலில் திருக்குளத்தையும், பஞ்சமுகவிநாயகருக்கு ஓர் ஆலயத்தையும் அமைக்கும் வேலைகளை ஆரம்பித்தார். இவ்வேலைகளை முடித்துத் தமது வாழ்நாளில் 2-வது மகாகும்பாபிஷேகத்தையும் நிறைவேற்ற இருந்த வேளையில் அமரராகி இவ்வுலகைவிட்டுச் சென்றார். கருணைவள்ளலாகிய ஐங்கரப் பெருமான் அவருக்குத்தரிசனம் கொடுத்த. தருமமான தினம் 25-வது வருடம் குருமகாசந்நிதானம் அவர்கள் சமாதியடைந்த அதே தினத்தில் இருந்

[5-ம் பக்கம் பார்க்க]

நவநாகரீக நகைகளுக்குச்
சிறந்த ஸ்தாபனம்
ஆறுமுகம் நல்லதம்பி
நகை மாளிகை
75, கன்னாதிட்டி — யாழ்ப்பாணம்
போன்: 664

பழம் பெரும் புராதன
வில்லூன்றி வீரகத்தி
விநாயகர்
இன்று
கும்பாபிஷேகத் திருநாளிலே
எல்லோருக்கும் அடுள்பாலிப்பாராக
மில்க்வைற்
தயாரிப்புகளின் மேலுறைகளை அனுப்பித்
தேவாரப் புத்தகங்களை பெற்றுப்
படியுங்கள்

அன்பளிப்பு
ஸ்ரீகாந்தா அச்சகம்
புத்தகசாலை,
213, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

மோட்டார் உதிரிப்பாகங்கள்
இணைப்பாகங்கள்
நேரடி இறக்குமதியாளர்களும்
விநியோகஸ்தர்களும்
முத்தையா மோட்டார்
ஸ்ரோர்ஸ்
89, கஸ்தூரியார்ரோட், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 514. தந்தி: "Genuine"

# 'நாகதம்பிரான் அருளால் எம். பி. யாகவந்தேன்'

யாழ்ப்பாணம், வெள்ளி

"நான் கரைச்சி கிராம சபை தலைவராகவும் கிளிநொச்சி பட்டணசபை தலைவராகவும் கிளிநொச்சி தொகுதி ஆட்சிமன்ற உறுப்பினராகவும் வருவதற்கு நாகதம்பிரானுடைய திருவருளே துணையாக இருந்தது. இக்காட்டில் ஏழை விவசாயிகளின் துன்பத்தை துடைத்து அருள்பாலித்துக்கொண்டிருப்பவர் நாகதம்பிரான் சுவாமியே"

புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய மைதானத்தில் நடந்த கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி பேசும் போது மேற்கண்டவாறு கூறினார்.

சென்ற வருடம் தவிர்க்க முடியாத காரணத்தால் நடைபெற முடியாதிருந்த நாகதம்பிரான் கோவில் வருடாந்த உற்சவம் இவ்வருடம் சிறப்பாக நடைபெற்றது. அடியார்கள் பொங்கல் பூசை முதலிய காணிக்கைகளை இரவிரவாக நிறைவேற்றினார்கள்.

கரைச்சி பிரிவு காரியாதிகாரி திரு. இ. யோகநாதன் தலைமையில் நடந்த இக்கூட்டத்தில் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி மேலும் கூறியதாவது: எனக்கு எத்தனையோ துன்பங்கள், துயரங்கள், தாக்கங்கள் வந்ததும், அவற்றிலிருந்து எல்லாம் மீளவைத்தவர் நாகதம்பிரான் சுவாமி தான். இங்கு குழுமியிருந்து பொங்கல் பூசை செய்து காணிக்கைகளைச் செலுத்தி வரும் அடியார்களின் வினை தீர்த்து அருள்பாலித்து ஆத்மீக உணர்வையும் வளர்த்து வருகின்ற நாகதம்பிரானை நாம் என்றும் வணங்கி இடர்களைவோம். இதுவரை காலமும் புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தைப் பற்றிவிபரம் அடங்கிய பிரசுரம் எதுவும் வெளிவரவில்லை. இன்று வெளியிடப்பட்ட இந்த மலரை அழகாக அச்சிட்டு உதவியவர்களை பாராட்டுகிறேன்.

வித்துவான் மு. சபாரத்தினம், ஆலயபரிபாலனசபை தலைவர் திரு. ஆர். ரி. சுப்பிரமணியம், சபை செயலாளர் திரு. கி. க. சின்னத்தம்பி ஆகியோர் உரையாற்றினார்கள். மலரை அச்சிட்டு உதவிய விவேகானந்தா அச்சக முதல்வர் திரு. வே. கந்தசாமிக்கு ஆலயபரிபாலன சபையினர் சைவப்புலவர் என்ற பட்டத்தை வழங்கி பொன்னாடை போர்த்தினர். மலரின் முதல் பிரதியை காரியாதிகாரி திரு. இ. யோகநாதனிடமிருந்து திரு. எஸ். வி. தாமோதரம் பெற்றுக்கொண்டார்.

# இந்திய முஸ்லிம் லீக் தலைவர் கடும் சுகவீனம்

சென்னை, மார்ச் 31

இந்திய முஸ்லிம் லீக்கின் தலைவரும் ஆட்சிமன்ற உறுப்பினருமான ஜனாப் முகம்மது இஸ்மாயில் கடும் சுகவீனமுற்று சென்னை மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வயிற்றோட்டம் காரணமாக கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட அவர் இன்று காலையில் இரு தடவைகள் நிரந்தரமாக சாந்தி எடுத்து மயக்கமுற்றார். இன்றுமாலையில் அவர் மீண்டும் மயக்கம் தெளிவுற்றதாகவும் ஆனால் ஆபத்துக் கட்டத்தை இன்னமும் தாண்டவில்லையென்றும் டாக்டர்கள் தெரிவித்தனர்.

ஜனாப் இஸ்மாயிலை ஆஸ்பத்திரியில் சென்று தமிழ்நாடு சுகாதார அமைச்சர் திரு அன்பழகன் உட்பட பல பிரமுகர்கள் பார்த்தார்கள்.

உடுவில் மான்ஸ் வித்தியாலயத்தில்

# சிங்கள ஆசிரியர் நியமிக்க கோரிக்கை

சுன்னாகம், வெள்ளி

"மாணவர்களின் கல்வி வளர்ச்சி ஆசிரியர்களில் மாத்திரமன்றி, பெற்றோர்களிலும் பெரிதும் தங்கியுள்ளது. மாணவர்கள் ஒரு நாளில் 6 மணித்தியாலங்களை பாடசாலைகளிலும் 8 மணித்தியாலங்களை தூக்கத்திலும் மிகுதி 10 மணித்தியாலங்களையும் பெற்றோருடனும் நண்பர்களுடனும் வேறு பல வழிகளிலும் செலவிடுகின்றனர். இந்நிலையில் அவர்கள் பழகும் போது சூழ்நிலை காரணமாக நல்லவர்களாகவோ கெட்டவர்களாகவோ மாறுகின்றனர். மாணவர்களின் விடயத்தில் பெற்றோர் கூடிய கவனம்செலுத்துவதினாலேயே அவர்களை நல்லநிலைக்கு கொண்டுவர முடியும்"

உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற பெற்றோர்-ஆசிரியர் சங்கப் பொதுக்கூட்டத்தில் பேசும் போது ஆசிரியர் திரு. எஸ். கணபதிப்பிள்ளை மேற்கண்டவாறு கூறினார்

அவர் மேலும் பேசுகையில், இன்றைய கல்வித்திட்டத்தின்படி அநேக பாடங்களை மாணவர்கள் பாடசாலையில் மட்டுமே படிக்க வேண்டுமென்றும் இப்பாடங்களை அவர்கள் வேறு யாரிடமும் படிக்கும் போது பிழையான விளக்கத்தின் மூலம் கல்வித்தரம் பாதிக்கப்படுகின்றதென்றும் கூறினார் மேலும் ஆசிரியர் இடமாற்றத்தாலும் கல்வித்தரம் பாதிக்கப்படுகின்றதென்றும் கூறினார்

அதிபர் திரு. என். குருநாதன் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் பல பெற்றோர்களும் ஆசிரியர்களும் பேசினர்

இப்பாடசாலையில் சிங்களம் கற்பிப்பதற்கு ஓர் ஆசிரியரைத் தரும்படியும் பாடசாலைக்குத் தளபாட வசதிகள் அமைத்துத் தரும்படியும் அரசாங்கத்திடம் கோருவதென்றும் தீர்மானிக்கப்பட்டது

இக்கூட்டத்தில் காரியமுகாமைச்சபையும் தெரிவு செய்யப்பட்டது. தெரிவு செய்யப்பட்டோர் பின்வருமாறு:

போஷகர் திரு. பொ நாகலிங்கம், தலைவர் திரு என். குருநாதன் காரியதரிசி திரு. எஸ். மூர்த்தையா பொருளாளர் திரு. என். யோகராசா. 9 பேர் கொண்ட நிர்வாகக் குழு ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது

## கவிப்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 02Q000488 | 02Q000162 |
| 03Q000942 | 13Q000895 |
| 11Q000501 | 15Q000544 |
| 14Q000625 | 17Q000796 |
| 01R000747 | 08R000759 |
| 03R000443 | 01R000050 |
| 16R000444 | 15 00 397 |
| 16R000944 | 15R000024 |
| 05S000542 | 08S000857 |
| 03S000820 | 05S000377 |
| 16S000152 | 19S000845 |
| 12S000925 | 16S000837 |
| 02T000622 | 05T000080 |
| 01T000814 | 12T000005 |
| 14T000167 | 12T000503 |
| 11T000500 | 20T000932 |
| 15T000266 | |
| 04U000872 | 08U000875 |
| 01U000240 | 10U000648 |
| 09U000589 | 12U000196 |
| 18U000874 | 20U000852 |
| 16U000978 | 12U000918 |
| 01V00081 | 01V000472 |
| 07V000636 | 07V000197 |
| 03V000760 | 10V000790 |
| 15V000132 | 18V 00220 |
| 16V000419 | 14V000852 |
| 16V00 038 | |
| 09W000168 | 09W000242 |
| 07W000173 | 16W000715 |
| 15W000849 | 11W000450 |
| 20W000912 | |
| 10X000405 | 10X000543 |
| 01X000721 | 20X000452 |
| 20X000364 | 19X000561 |
| 04Y000616 | 08Y000949 |
| 01Y000584 | 03Y000055 |
| 01Y000743 | 17Y000515 |
| 13Y000922 | 13Y000865 |
| 20Y000670 | |
| 06Z000750 | 01Z000436 |
| 10Z000589 | 14Z000354 |
| 15Z000130 | 18Z000779 |
| 13Z000219 | |

[இவையாவும் உறுதிப்படுத்தப்படவேண்டியவை]

## இராஜரத்ன —

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

கும் சிலைதப்பேற்றைப்பணித்தார்.

தூய பக்தியுள்ளத்துடன் ஒருவர் ஆரம்பிக்கும் பணி எப்போதும் நிறைவேறும் வளர்ச்சியுறும் அன்றோ? அதிருப்பப்படி இன்று கும்பாபிஷேகம் நடைபெறவிருப்பது அன்னாரது தூய உள்ளத்திற்கு ஓர் எடுத்துக்காட்டு இக்கும்பாபிஷேகம் அன்னாரது ஆத்மாவிற்கும் சாந்தியளிக்கும். அன்னார் நினைவாக அமைக்கப்படும் நூல்நிலையம் அன்னார் சேகரித்த நூல்களையும் ஏடுகளையும் தாங்கியிருக்கும். வானளாவி நிற்கும் இராஜகோபுரமென்றும் இராஜரத்னம் சிவாச்சாரியாரின் நினைவுச் சின்னமாக விளங்கும்,

## 'இன்று பொழுது போக்கு'

யாழ்ப்பாணம், சனி

திரு எஸ் பீ. கிருஷ்ணன் எழுதிய 'பொழுதுபோக்கு' சிறுகதை நூல் வெளியீட்டு விழா இன்று யாழ். வேல்வியூ ஹோட்டல் மேல்மாடியில் மாலை 5 மணிக்கு நடைபெறும்.

திரு வி என் நவரத்தினம் எம் பி தலைமைவகிப்பார். திரு எஸ் நடராசா முதல் பிரதியை வாங்குவார். திருவாளர்கள் புதுமை லோலன், கே கணேசலிங்கம் செங்கை, கே டானியல் ஆகியோர் கலந்து கொள்வர்.

## நியமனம்

சுன்னாகம், வெள்ளி

உடுவில் "மான்ஸ்" மகா வித்தியாலயத்தில் கடந்த 19 வருடங்களாக ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. என். சோமராசா சுதுமலை தமிழ்க் கலவன் பாடசாலையில் தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மூப்புடைய கூட்டுறவுப் பரிசோதகர்களுக்கு

# சேவைக்கேற்ப சம்பள உயர்வு வழங்கப்படும்

கொழும்பு வெள்ளி

கூட்டுறவு இலாகாவைச் சேர்ந்த கூட்டுறவு பரிசோதகர்களில் மூப்புடையவர்களுக்கு அவர்களின் சேவைக்கேற்ப நிலுவைப்பணமின்றி சம்பளஉயர்வு வழங்குவதெனவும் 1956-ம் ஆண்டுக்குப் பின் சேவைக்கு நியமனம்பெற்ற கூட்டுறவு பரிசோதகர்கள் சிலருக்கு 3 வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்த சம்பளஉயர்வை கொடுப்பதற்கு நிதியமைச்சருடன் பேசி நடவடிக்கை எடுப்பதாகவும் உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக அமைச்சர் திரு. ரி. பி. இலங்கரத்தின கூட்டுறவுப் பரிசோதகர் சங்கங்களின் பிரதிநிதிகள் மத்தியில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அகில இலங்கை கூட்டுறவுப் பரிசோதகர்கள் சங்கம் உட்பட 7 கூட்டுறவும் பரிசோதகர்கள் சங்கத்தின் பிரதிநிதிகள் கடந்த திங்கள் கிழமை அமைச்சருடன் நடத்திய பேச்சுவார்த்தையின்போது கலந்துகொண்டனர். உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தகஅமைச்சரின் அலுவலகத்தில் நடைபெற்ற இப்பேச்சுவார்த்தையில் கூட்டுறவுபரிசோதகர்களின் பல்வேறு பிரச்சினைகள் பற்றி பேசப்பட்டன.

அரசாங்கத்தில் உயராச் சம்பளத்தில் பதவிபெறும் திட்டத்திற்குரிய தெரிவுச்சபையில் இத்தொழிற் சங்கங்களின் பிரதிநிதிகளும் இடம்பெறச் செய்யவேண்டுமென்ற கோரிக்கையையும் அமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

இப் பேச்சுவார்த்தையில் அமைச்சர் இலங்கரத்தின அமைச்சின் மேலதிக நிரந்தரச்செயலாளர் திரு. செனரத்தின, கூட்டுறவு ஆணையாளர் ஒபேசேகர குணசேகரா ஆகியோர் கலந்துகொண்டனர். இலங்கை கூட்டுறவு பரிசோதகர்கள் சங்கத்தின் சார்பில் சங்கத் தலைவர் திரு. இ. யோகநாதன், செயலாளர் திரு. ஜு. ஜெகராசசிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

(கு: நி)

மென்பந்து சுற்றுப் போட்டி

# தெல்லிப்பழை யூனியன் கழகம் வடமாகாண சாம்பியன்

யாழ்ப்பாணம், சனி

விளையாட்டுத்திணைக்களத்தினால் நடாத்தப்படும் அகில இலங்கை மென்பந்தாட்டச் சுற்றுப்போட்டியில் வடமாகாணத்தில் "தெல்லிப்பழை யூனியன்" கழகம் சாம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இப்போட்டி முதலில் வடமாகாணத்தில் உள்ள 13 காரியாதிகாரிப் பிரிவுகளிலுமுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நடைபெற்றது. பின் ஒவ்வொரு காரியாதிகாரி பிரிவுச் சாம்பியன்களிடையே நடைபெற்ற போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கழகம் சாம்பியனாகவந்தது.

மாகாணச் சாம்பியன்களின் மோதல் கொழும்பில் நடைபெறவிருப்பதினால், வடமாகாணச் சாம்பியனான "தெல்லிப்பழை யூனியன்" விரைவில் தெல்லிப்பழை விளையாட்டுத்திணைக்கள உத்தியோகத்தர் திரு எம். ஆ. தம்பிராசாவின் தலைமையில் கொழும்பு செல்லவிருக்கின்றது.

தெல்லிப்பழை காரியாதிகாரிப் பிரிவுச் சாம்பியன் யூனியன் கழகத்துக்கும், யாழ்ப்பாண காரியாதிகாரிப் பிரிவுச் சாம்பியன் "அராலி" விளையாட்டுக் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற இறுதி மோதலில், தெல்லிப்பழை யூனியன் வெற்றிபெற்றது.

யாழ்ப்பாணத்தில் மென்பந்தாட்டத்தில் பிரசித்தி பெற்ற விளையாட்டுக் கழகங்களான "பங்களன்ஸ்", "வளர்மதி". அரியாலை, "சென்னடி", "கிரீன்பீல்ட்" ஆகிய கழகங்கள் இந்தச் சுற்றுப் போட்டியில் தோல்வியடைந்தது குறிப்பிடத்தக்கது.

(தே. நி)

அராலி

## வை. எம். எச். ஏ. சாம்பியன்

யாழ்ப்பாணம், சனி

வலிகாமம் மேற்கு காரியாதிகாரி பிரிவில் விளையாட்டுத்திணைக்களத்தால் நடாத்தப்பட்ட 30 ஓவர்களைக் கொண்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் அராலி மேற்கு வை. எம். எச். ஏ. கோஷ்டியினர் பண்டத்தரிப்பு வை. எம். சி. ஏ. கோஷ்டியினரை 40 ஓட்டங்களால் தோற்கடித்து வலிமேற்கில் சாம்பியன் பட்டத்தைத் தட்டிக் கொண்டனர்.

அராலியைச் சேர்ந்த செல்வன் சு. பத்மநாதன் சிறந்த பந்தெறி வீரராகவும், செல்வன் வி. தில்லைநாதன் சிறந்த துடுப்பாட்ட வீரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

## ஏப்ரல் 8-ல் செயற்குழு

யாழ்ப்பாணம், சனி

தமிழரசுக் கட்சியின் செயற்குழுக்கூட்டம் இம்மாதம் 8-ம் திகதி கிளிநொச்சியில் நடைபெறவிருக்கிறது. கட்சித்தலைவர் திரு என் எம். இராசமாணிக்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் திரு. அமிர்தலிங்கத்தின் ராஜினாமா கடிதம் பற்றி பரிசீலனை செய்யப்பட்டு முடிவு எடுக்கப்படவிருக்கிறது. வருடாந்த மாநாடு உட்பட பல விஷயங்கள் பற்றியும் ஆராயப்படவிருக்கிறது.

போதனு வகுப்புகள்
(TUITION CLASSES)
க. பொ. த. சாதாரணம்:- ஆங்கிலம், சிங்களம், கணிதம்
8-ம் வகுப்பு:- ஆங்கிலம், புதிய கணிதம் பொது விஞ்ஞானம்
6-ம், 7-ம் வகுப்பு:- ஆங்கிலம், புதிய கணிதம்
நேரம்:- பிற்பகல் 4-00 மணி தொடக்கம்
விபரங்களுக்கு நேரில் வரவும்.
இறவுண் போதனு நிலையம்
இல 16. கண்டி வீதி. யாழ்ப்பாணம்
(யாழ்ப்பாணம்-கச்சேரி பஸ்பாதையில் அமைந்துள்ளது)

